வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,455,28,47,000/–, மூலதனக் கணக்கில் ரூ.900,00,03,000/–மற்றும் கடன் கணக்கில் ரூ.700,80,09,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30–3–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6–07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

56. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2002 ஆம் ஆண்டு ஹஜ் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 35/2002) 34(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

97. 2022–2023 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ்–ஆங்கிலம்)